[1979 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனைப்படி அது கொண்டாடத் தேவையில்லை. என்று அரசு கருதுகிறது. ஆனால் உரியபடி, சட்டப்படி ஊழல்களை ஒழிப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை சட்டப்படி உறுதியாக இந்த அரசு எடுக்கும்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட மத்திய வங்கியில் நடந்த நடை முறைகளுக்கும், மோசடிகளுக்கும் பொறுப்பாக இருந்த துணைப் பதிவாளர் அவர்களும், இன்னும் சில வங்கி ஊழியர்களும், ஆகியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அத்தகைய மோசடிகளுக்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் அந்தக் காலக் கட்டங்களில் அந்த வங்கியினுடைய தலைவர்களாக இருந்தவர்கள் தான். அவர்கள் குறுநில மன்னர்களாக திகழ்ந்து வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற முறையில், அவர்களைக் கைது செய்து அவர்கள் மீது வழக்குத் தொடர அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனைகள் ஆலோசிக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட மத்திய வங்கியில் முறைகேடுகள் நடந்ததால் அப்பாவி விவசாயிகள் மீது கடன் வாங்கியதாக பொய் ரிக்கார்டு செய்துள்ளதால் அவர்கள் புதிய கடன் கேட்கின்ற நேரத்தில், பழைய கடனைத் தரவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுதுவதும், கடன் பெறமுடியாத நிலை அரசுக்குத் தெரியுமா ? அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அந்த நலிவுற்ற மத்திய வங்கியை புனர் அமைப்பதற்காக பல நடவடிக்கைகளை மாநில அரசும், மத்திய அரசும் சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அந்த வகையில் நியாயமாக விவசாயிகளுக்கு உரிய வசதிகளை செய்ய நிச்சயமாக இந்த அரசு முயற்சிக்கும்.

திருவண்ணாமலை, செங்கம் வட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்கள்.

* வினா எண் 681—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

திருவண்ணாமலை செங்கம் இரண்டு வட்டங்களிலும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயிகள் உழவு கடன் பெற இயலாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

1979 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : திருவண்ணாமலை, செங்கம் இரண்டு வட்டங்களிலும 61 கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 30கடன் சங்கங்கள் உழவுக் கடன் வழங்க இயலாத நிலையில் உள்ளன.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வட ஆற்காடு மாவட்ட வங்கியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல தனியார் வாங்கிய கடன் 'ஓவர்டியு' ஆனால் அவர்களுக்குத் திருப்பி கடன் தருவதில்லை. அதுபோல் ஒவ்வொரு சொஸைட்டியிலும் விவசாயிகள் 'ஓவர்டியு' இருந்தால் அவர்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. ஆகவே, மறு பரிசிலனை செய்து எல்லா விவசாயிகளுக்கும் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வகையில் வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தகுதியுள்ள சங்கங்களுக்கு இன்று கூட்டுறவு மத்திய வங்கி கடன் வழங்கி வருகிறது. அதே நேரத்தில் வறட்சி நிவாரணப் பணிகள், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம மேம்பாடுத் திட்டம் இவைகள் செயல் படுத்தப்படும் பகுதிகளில் தவணை செலுத்தும் கட்டுப் பாடுகளுக்கு விதிவிலக்கு அளித்து அங்குள்ள விவசாயிகளுக்கு அந்தந்த சங்கங்கள் தகுதியில்லாமல் இருந்தாலும்கூட, தவணை கட்டாமல் இருக்கும் விவசாயிகளுக்கும் ஆங்காங்கு கடன் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி : அந்தச் சங்கங்களில் கடன் கொடுப்பதில்லை என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. ஆகவே, எந்தெந்த சங்கங்களில் இப்போது கடன் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரண்டு வட்டங்களிலும் உள்ள குறிப்புகள்தான் இங்கே இருக்கின்றன. மேலும் விவரங்கள் வேண்டும் என்று மாண்புமிகு துரை முத்துசாமி அவர்கள் தனிக்கேள்வி போடுவதாக இருந்தால் அதற்கான விவரங்களை தரலாம்.